**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

सत्यमेव जयते

Off. : 0413-2333399, 2335530
2335328
Fax : 0413-2333135
Res. : 5, Ellaiamman Koil Street
Puducherry-605 001
0413-2339099
e-mail: cm.pon@nic.in

No. 1959/CM/Mssg./2017/16 **Date:** 04.09.2017

## ஆசிரியர் தின வாழ்த்து செய்தி

ஆண்டுதோறும் செப்டம்பர் 5-ம் தேதி ஆசிரியர்கள் தினமாக சிறப்பாகக் கொண்டாப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடிமகனின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் ஏணியாக விளங்கும் ஆசிரியர்களை வாழ்நாள் முழுவதும் மறவாமல் நினைவில் வைத்துபோற்றும் தினமாக ஆசிரியர் தினம் விளங்குகிறது. அரிச்சுவடி முதற்கொண்டு நம் திறன் மேம்பாடுவரை நமக்குச் சொல்லிக் கொடுத்து நமது வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் நாட்டின் வளர்ச்சிக்கும் உற்றதுணையாக இருப்பது ஆசிரியர் சமூகமே.

தன்னலம் கருதாமல் மாணவர் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்நாள் முழுவதும் கல்வி பணிக்கென்றே தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்ற ஆசிரியர் சமூகத்திற்கு நாம் என்றென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளோம். ஆசிரியர்களின் பங்களிப்பு இல்லாத சமூகம் முன்னேறியதாக சரித்திரங்கள் ஏதும் இல்லை. எனவே ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடையாளமாக இருப்பது ஆசிரியர்களின் பணியே. எதிர்கால இந்தியாவின் ஏற்றமும் வளர்ச்சியும் ஆசிரியர்களின் கைகளிலேயே உள்ளது என்றால் அது மிகையல்ல. நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர் கால சந்ததியினரை உருவாக்குவதற்கும் அயராதுபாடுபடும் ஆசிரிய பெருமக்களுக்கு எனது ஆசிரியர் தின வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

(வே. நாராயணசாமி)